# காழி நீதிமன்றமும் நிர்வாக சீர்த்திருத்தமும்

## QUAZI COURT AND ADMINISTRATIVE INTEGRITY

[1]M.M.M. Sabir and [2]Dr. M.I.M. Ameen
*[1]Senior Lecturer in Islamic Civilization, Faculty of Arts, University of Colombo,* *sabir@icv.cmb.ac.lk*
*[2]Former Senior Lecturer, University of Peradeniya,* *mamameen1938@gmail.com*

**Summary**

*Dispensing justice is considered an ibadah, or act of worship, in Islam. It is a fundamental commandment outlined in the Holy Quran and exemplified by the Prophet Muhammad (SAW). Those who deviate from delivering the correct verdict, whether due to personal biases or ignorance, are admonished in Islamic teachings, with dire consequences for those who perpetuate injustice. Conversely, upholding justice is viewed as a means to attain paradise, highlighting its paramount importance in Islamic jurisprudence. Educating judges on the principles of Islamic law pertaining to justice is essential for enabling them to administer impartial justice effectively. Historically, early Arab Muslims who settled in Sri Lanka and their successors possessed expertise in this area, appointing knowledgeable individuals as Qazis to adjudicate matters of marriage, divorce, and disputes within the community. However, during the colonial period, the decline in Muslim education and cultural training posed challenges in finding qualified Qazi judges. The discussions surrounding the Muhammadan Marriage Act of 1886 in the Legislative Council revealed a lack of legal scholars in Ceylon capable of interpreting the legal provisions regarding divorce. Consequently, the establishment of the Qazi Court was initially avoided. Nevertheless, the enactment of the Muslim Marriage and Divorce Act of 1951 legalized the Qazi Court and mandated the appointment of Qazi Judges. At that time, minimum educational qualifications for Qazi judges were not stipulated; instead, candidates were required to be Muslim men of good character, social standing, and analytical judgment abilities.*

### 1. அறிமுகம்

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம், முஸ்லிம் விவாகப் பதிவு, விவாகரத்து, காழி நீதிபதிகள் நியமனம், தாபரிப்பு முதலான விடயங்களை சிறப்பாக வழி நடாத்துவதற்கான ஒரு வழிகாட்டுச்சட்டம் ஆகும். குர்ஆன், சுன்னாஹ் எனும் இரு பிரதான மூலாதாரங்களையும், ஸஹாபாக்களின்

வாழ்வியலையும் முன்னுதாரணமாகக் கொண்ட ஷரீஆ விதிகளின் அடியாக இச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறுபான்மையினராக வாழ்கின்ற முஸ்லிம்கள் ஆரம்ப கால முதலே ஷரீஆ சட்டத்தின் வழிநின்று தம் குடும்ப வாழ்வை மேற்கொண்டனர். இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்கள் இச்சட்ட விதிகளைப் பின்பற்றிய வழிமுறையை இரு காலகட்டங்களாக வகுத்து ஆராய்வது கூடிய பயனைத் தரும்.

1. இலங்கையில் முஸ்லிம்கள் குடியேறிய காலம் முதல் கி.பி 1806
2. கி.பி 1806 முதல் தற்காலம் வரை

மேற்குறித்த முதலாம் காலகட்டத்தில் இலங்கையில் குடியேறிய அரபு முஸ்லிம்கள் தாம் முன்னர் வாழ்ந்த பிரதேசங்களில் நடைமுறையில் இருந்த ஷரீஆ விதிகளுடன் நன்கு பரிட்சயமாக இருந்தனர். கி.பி எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தொகுக்கப்பட்டிருந்த பிரதான மத்ஹப்கள் சார்ந்த ஷரீஆ சட்டத்தொகுப்பு நூல்களுடனான பரிட்சயமும் அவர்களுக்கு இருந்தது. ஆதலால் அவர்கள் இலங்கையில் துறைமுக நகரங்களிலும், பின்பு உள்நாட்டிலும் வாழ்கின்ற போது எவரது தூண்டுதலோ, அரசு அனுசரணையோ இன்றி விவாக விவாகரத்து நிகழ்வுகளை ஷரீஆவின் வழிகாட்டலில் சுயமாகப் பின்பற்றினர். இக்கருத்தை பின்வரும் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையை தரிசித்த அரபு பிரயாணி இத்ரீஸ் என்பவர் விட்டு சென்றுள்ள குறிப்புகள் கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமது சொந்த சட்ட திட்டங்களதும் மரபுகளதும் அடிப்படையில் தம்மிடையே எழுந்த பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் அனுமதியை பெற்றிருந்தனர் என்பதை காண்பிக்கின்றன. இத்தகவலை முன்னாள் பதிவாளர் நாயகமாகக் கடமையாற்றிய M.H.M. பாரூக் என்பவர் M.M.M. மஹ்ரூப் என்பவர் பதிப்பித்த In Ethnological Survey of the Muslims of Sri Lanka எனும் நூலில் எழுதிய 'Muslim Law' எனும் கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையை ஆட்சி செய்த ஒல்லாந்தர் கால அதிகாரி ஒருவர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் முஸ்லிம்கள் பற்றி பின்வருமாறு குறித்துள்ளார்.

> "அவர்களிடம் வழிபாடு, சட்டங்கள் என்பன சம்பந்தமாக தனியான நூல் ஒன்றுண்டு. அதன் விதிகளுக்கமையவே சமயம், கல்யாணம், விவாகரத்து, விபச்சாரம், சொத்துரிமை போன்றன பற்றிய அவர்களது வழக்குகள் தீர்க்கப்படும்."

இந்த தகவல்களை சி. பத்மநாதன் என்பவர் தனது இலங்கை தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும் எனும் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

இக்காலப் பகுதியில் விவாகத்தை முன்நின்று நடாத்தி வைத்த லெப்பைமார் விவாகத்தை பற்றிய விபரத்தை ஒரு தாளில் எழுதி தம் வசம் வைத்திருந்தனர். இப்பதிவே 'கடுத்தம்' என்றழைக்கப்பட்டது. கணவன் மனைவி

ஆகிய இருதரப்பினரால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு பிரமுகரை தாமே நியமித்து அவர் மூலம் விவாகரத்தை பெற்றுக் கொண்டனர்.

விவாகத்தை பதிவு செய்த லெப்பைமாரின் பொறுப்பற்ற தன்மை இந்நடைமுறையில் பல பிரச்சனைகளைத் தோற்றுவித்தது. குறிப்பாக போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சியில் முஸ்லிம் சமூகத்தின் பொருளாதாரம், கல்வி வளர்ச்சி, குடியிருப்புக்கள் என்பன பாதிப்புக்குள்ளாகின. அதனால் கால ஓட்டத்தில் முஸ்லிம் சமூகத்தின் பண்பாட்டுப் பயிற்சி தளர ஆரம்பித்தது. அதனால் முஸ்லிம்களின் விவாக விவாகரத்து நடைமுறைகளை சமூக நலனைப் பாதுகாக்கும் நோக்கில் மேற்பார்வை செய்வது அவசியம் என்பது உணரப்பட்டது. அதனால் முஸ்லிம் சமூகத்தின் அங்கீகாரத்துடன் அரசு அனுசரணையுடன் சட்ட விதிகளை தொகுத்து ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கி.பி 1806 முதல் அமுல்படுத்தலாயினர். அது முதல் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்ட அமுலாக்கக் கட்டம் ஆரம்பமாகியது.

ஒல்லாந்த தேசாதிபதி பால்க் (Falck) என்பவர், இந்தோனேசியாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட ‘பட்டேவிய ஆர்டிகல்’ என்ற சட்ட தொகுப்பில் இடம்பெற்றிருந்த இஸ்லாமிய விவாகங்களும் வாரிசுரிமை பற்றியதுமான சட்டக் கோவையை கொழும்பில் வாழ்ந்த முஸ்லிம் பிரமுகர்களின் அங்கீகாரத்துடன் கி.பி 1770 முதல் இலங்கையில் அறிமுகப்படுத்தினார்.

கி.பி 1806 முதல் ஆரம்பித்த இரண்டாம் கால கட்ட வரலாற்றில் மூன்று முக்கிய சட்டங்கள் அமுலாக்கப்பட்டன.

I. கி.பி 1806 இல் அறிமுகம் செய்த முஹமதியர்கள் பற்றிய சட்டங்கள்
II. கி.பி 1886 முதல் அமுல் செய்யப்பட்ட முஹமதியர்களின் விவாகச் சட்டம்
III. கி.பி 1951 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம்

இவற்றை நடைமுறைப்படுத்தும் போது அவற்றில் சில குறைபாடுகள் இருப்பதை உணர்ந்து படித்த வர்க்கத்தினர் அரசிடம் அவற்றை திருத்த குரல் கொடுத்தனர். குறைபாடுகளை சரியாக இனம் கண்டு தேவையான திருத்தங்களை முன் வைப்பதற்காக சில முயற்சிகள் தற்காலத்திலும் மேற்கொள்ளபபட்டு வருவதை அவதானிக்கலாம்.

## 2. காழி நீதிமன்றங்களை நிறுவுதலும் காழி நீதிபதிகள் நியமனமும்

முஸ்லிம்கள் இந்நாட்டில் குடியேறியது முதல் கி.பி 1937 வரை காழி நீதிமன்றங்கள் இன்றி மக்களின் அங்கீகாரம் பெற்ற ஓர் ஆலிம் அல்லது மஸ்ஜிதில் இமாமாக கடமையாற்றும் ஒரு தனிநபரே விவாகரத்தை முன் நின்று நடாத்தி வைத்தார். கி.பி 1806 ஆம் ஆண்டின் முஹம்மதியா சட்டமும் கி.பி 1886 ஆம் ஆண்டு விவாக சட்டமும் கூட இந் நடைமுறையில் தலையிடவில்லை.

*1886 ஆம் ஆண்டின் முஹம்மதியா சட்ட நகல் சட்ட நிரூபண சபையில் விவாதிக்கப்படும் போது காழி மன்றத்தை நிறுவி காழி நீதிபதிகளையும் நியமிக்க வேண்டும் என்ற ஒரு கருத்து முன் வைக்கப்பட்டது. தகுதியுடைய காழி நீதிபதிகள் இல்லை என்ற காரணத்தை முன்வைத்து இக்கோரிக்கை அப்போது நிராகரிக்கப்பட்டது.*

*விவாகம் புரிந்த பெற்றோரோ அல்லது அவரது வலிகாரரோ நாட்டில் வழக்கில் இருக்க மரபு வழி சட்டத்தை பின்பற்றி காழியாக ஒருவரை நியமித்து தீர்ப்பை பெறுவது செல்லுபடி ஆகாது என்றும் மாவட்ட நீதிமன்றம் ஒன்றின் மூலம் மட்டுமே பெண் ஒருவர் விவாகரத்தை கோரிப் பெறலாம் என்றும் கி.பி 1925இல் சுப்ரிம் கோட் தீர்ப்பு வழங்கியது. இதனால் காழி நீதிமன்றத்தை நிறுவ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அரசு உள்ளாகியது.*

*இதன் விளைவாக அப்போதைய பதில் சட்டமாக அதிபராக கடமையாற்றிய ஆ.வு அக்பர் என்பவரின் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட ஒரு தெரிவுக்குழுவை அரசு நியமித்தது. அதன் சிபாரிசுக்கு இணங்கவே 1929 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க அரச ஆணையின் மூலம் காழி நீதிமன்றமும் மேன்முறையீடு செய்வதற்கான காழி சபையும்* (Board of Quazi) *செயல்வடிவம் பெற்றது.*

*எனினும் 1937 இல் தான் காழி நீதிமன்றம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் பின்பும் சில சீர்த்திருத்தங்களை காழி நீதிமன்றம் அவாவி நின்றதால் அப்போது கடமையாற்றிய பதிவாளர் நாயகத்தின் தலைமையில் நீதியரசர் ஆ.வு அக்பர், வு.டீ ஜாயா, ஆ.து.ஆ ஹனிபா எனும் முஸ்லிம் பிரமுகர்கள் உட்பட்ட ஒரு தெரிவுக்குழு செய்த சிபாரிசுக்கு இணங்கவே தற்போது வழக்கில் உள்ள 1951 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் இச்சட்டம் கி.பி 1954 இல் இருந்தே நடைமுறைக்கு வந்தது. இதன் பின்பும் மேற்கொள்ளப்பட்ட சில திருத்தங்களுடன் காழி நீதிமன்றமும் காழி சபையும் தொடர்ந்து செயற்படுகின்றன. இச்சட்டத்தின் படி காழி நீதிபதிகளையும் காழி சபை உறுப்பினர்களையும் உள்நாட்டு அமைச்சரே நியமித்தார். சைனுதீன் எதிர் தனினா எனும் வழக்கில் காழி நீதிபதியை உள்நாட்டு அமைச்சர் நியமிப்பது யாப்புக்கு முரணானது என்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவே இத்தகைய நியமனங்களை மேற்கொள்ளுதல் வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் 1962 இல் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனால் 1965 ஆம் ஆண்டில் பதினோராம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலம் காழி நீதிபதிகளையும் காழி சபை உறுப்பினர்களையும் நியமிக்கும் அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டது. தற்போது இந்நடைமுறையே பின்பற்றப்பட்டு வருகின்றது.*

### *3. காழி நீதிபதிகளின் தகைமைகள்*

*நீதி வழங்குதல் என்பது குர்ஆனின் கட்டளை. நபிகளார் (ஸல்) அவர்களின் நடைமுறை. தன் முன் வைக்கப்பட்ட பல பிரச்சினைகளுக்கு நபிகளார் (ஸல்) அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். தூரப்பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் தீர்ப்பு வழங்கி வழிகாட்ட குர்ஆன் ஹதீஸ் கலைகளில் ஆழ்ந்த புலமை உடைய அலி இப்னு அபீதாலிப்*

(றழி), முஆத் இப்னு ஜபல் (றழி) போன்ற ஸஹாபாக்களையே நபிகளார் காழி நீதிபதிகளாக நியமித்தார். ஸஹாபாக்கள், தாபிஈன்கள், தபஉத்தாபிஈன்கள் காலங்களிலும் இத் துறையில் தகைமை பெற்றவர்கள் மட்டுமே காழி நீதிபதிகளாக நியமிக்கப்பட்டார்கள்.

இலங்கையில் ஆரம்ப காலத்தில் குடியேறிய அரபு முஸ்லிம்களும் அவர்களிடம் கல்வி பயின்றவர்களும் இத்துறையில் புலமைப் பெற்றவர்களாக இருந்ததால் அத்தகையவர்களில் ஒருவரை தாமே காழியாக நியமித்து தமது விவாக, விவாகரத்து, தாபரிப்பு போன்ற பிரச்சனைகளில் தீர்ப்புகளை பெற்றனர். இம்மரபு தொடர்ந்து நீடித்த போதும் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் கல்வியிலும் பண்பாட்டுப் பயிற்சிகளிலும் தளர்வடைந்ததால் தகைமையுடைய காழி நீதிபதிகளை தேடிக்கொள்வது சிரமமாகியது.

கி.பி 1886 ஆம் ஆண்டின் முஹம்மதிய விவாகச்சட்டம் சட்டநிரூபண சபையில் கலந்துரையாடப்பட்ட போது விவாகரத்து பற்றிய சட்ட விதிகளை விளக்கக்கூடிய சட்ட அறிஞர்கள் இலங்கையில் இல்லை என்ற கருத்து முன்வைக்கப்பட்டது என்பதை Recordings of the Legislative Council Session 1885-1886 என்ற பதிவில் காண முடிகிறது. இதனாலேயே அதன் போது காழி நீதிமன்றத்தை நிறுவுவது தவிர்க்கப்பட்டது.

எனினும் 1951 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் (The Muslim Marriage and Divorce Act of 1951) காழி நீதிமன்றத்தையும், காழி நியமனத்தையும் சட்டபூர்வமாக்கியதால் அதன்பின் காழி நீதிபதிகளை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் போது காழி நீதிபதிகளுக்கான குறைந்தபட்ச கல்வித் தகைமைகளேனும் கோரப்படவில்லை. மாறாக முஸ்லிமான ஆணாகவும், நற்பண்புகள் உடையவராகவும், சமூக அந்தஸ்துடையவராகவும், பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து தீர்ப்பு வழங்கும் திறன் கொண்டவராக இருப்பதுவே தகைமைகளாக சுட்டிக்காட்டப்பட்டது.

கி.பி 1936 இல் பதிவாளர் நாயகமாக கடமையாற்றிய து.நு.று றொக் என்பவர் காழியாக ஒருவரை நியமனம் செய்யும்போது பின்வரும் அறிவுறுத்தலை வழிகாட்டியாகக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார். இஸ்லாமிய சமய இயல், ஷரீஆ சட்டம் என்பவற்றில் அறிவுடையவராக மட்டுமல்லாமல் அனுபவமும் நுண்ணறிவும் உடையவராக இருப்பதுடன் இந்நாட்டு முஸ்லிம்களின் விவாக மரபுகள் பற்றிய அறிவும் உடையவராக இருப்பதும் அவசியமாகும். அத்துடன் நிகழ்வுகளில் உண்மைத் தன்மையை கிரகித்துக் கொள்ளும் ஆற்றலும் மிகச் சரியான வழிமுறையில் விசாரணைகளை நடாத்தும் திறனும் இருப்பதும் அவசியம். வாதியையும் பிரதிவாதியையும் ஓர் இணக்கப்பாட்டுக்கு கொண்டு வரக்கூடிய சாதுரியமும், தாபரிப்பு வழக்குகளில் சரியான தீர்ப்பு வழங்கும் திறனும், அந்தஸ்தும் பொதுவான ஒரு கல்வித் தகைமையும் இருப்பது அவசியமாகும்.

காழி நீதிபதிகளின் நியமனத்துக்காக விண்ணப்பங்களைக் கோரி 1992 மே 28ஆம் திகதியின் அரச விளம்பரத்தில், சமூக அந்தஸ்தும், நன்னடத்தையும் உடையவராகவும், 35 வயதுக்குக் குறையாதவராகவும், இலங்கை

பிரஜையாகவும், ஆணாகவும் இருக்கும் ஒருவர் விண்ணப்பிக்க முடியும் என்று விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறித்த தகவல்கள் காழி நீதிபதிக்கான குறைந்தபட்ச கல்வித் தகைமை பற்றியேனும் குறிப்பிடப்பட்டில்லை என்பது சுட்டிக்காட்டுத்தக்கதாகும். நீதிச்சேவை ஆணைக்குழுவின் காரியதரிசியாக ஜனாப் அப்துஸ்ஸலாம் என்பவர் கடமையாற்றும் போது பின்வரும் கல்வித்தகைமை உடையவர்களே காழி நீதிபதி பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என்று அறிவித்தார்.

1. மௌலவி தராதரம்
2. சட்டத்தரணி
3. அரபு அல்லது இஸ்லாமிய நாகரிகம் எனும் பாடத்தை ஒரு பாடமாக பயின்ற பட்டதாரி
4. ஓய்வு பெற்ற அதிபர் அல்லது கல்வி அதிகாரி போன்றவர்கள்

நபிகளார் (ஸல்) அவர்களின் காலம் முதல் நீதித்துறை முஸ்லிம் சமூகத்தில் முதன்மை பெற்றிருந்தது. அதனால் முஸ்லிம் அறிஞர்கள் சிலர் நீதித்துறை பற்றியும் காழி நீதிபதிகளுக்கு இருக்க வேண்டிய கல்வி, பண்பாட்டுத் தகைமை என்பன பற்றியும் குறித்துச் சென்றுள்ளனர்.

ஹிஜ்ரி 620 இல் மரணித்த இப்னு குதாமா அல்முகத்தஸி தனது மு∴னி என்னும் நூலில் காழி நீதிபதிகளின் தகைமைகள் பற்றி குறித்துள்ளார்.

> ‘‘காழி நீதிபதி கடுகடுப்பு அற்றவராக ஆயினும் கடுமையானவராக, பலவீனமற்றவராக ஆயினும் மிருதுவானவராக இருப்பது அவசியம். செல்வாக்கு மிக்கவர்கள் அநீதியான தீர்ப்பை எதிர்பார்க்காதிருப்பதற்கும், பலவீனமானவர்கள் நீதியான தீர்ப்பு பற்றிய நம்பிக்கையை இழக்காதிருப்பதற்கும் அது உதவும். சிந்தனைத் தெளிவு, புத்திசாதுரியம், விழிப்புணர்ச்சி, ஏமாற்றப்பட முடியாத்தன்மை, கூர்மையான பார்வை, தெளிவான கேள்விப் புலன், குறித்த பிரதேசங்களின் பேச்சு மொழிப் புலமை என்பவற்றுடன் தக்வா உடையவராக இருக்க வேண்டும். மிதமான உணவு உட்கொள்பவராகவும், தூய்மையானவராகவும், கம்பீரமானவராகவும், பேராசை அற்றவராகவும், உண்மை பேசுபவராகவும், வாக்கை நிறைவேற்றுபவராகவும், கொடுங்கோண்மை அற்றவராகவும் காழி நீதிபதிகள் இருப்பது அவசியம்.’’

காழி நீதிபதி முஸ்லிமாகவும் வயது வந்தவராகவும் இருத்தல் வேண்டும் என்றும் அவர்களின் நற்குடிபிறப்பு பற்றியும், பொருள் வசதி பற்றியும் கருத்தில் கொள்ளப்படுவது அவசியம் என்றும் இரண்டாம் கலிபா உமர் கத்தாப் (றழி) அவர்கள் தனது கவர்னர் அபூ மூஸா அஷ்அரி (றழி) அவர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

தூய்மையான நடத்தை, பொறுமை, அறிவுடைமை, அறிஞர் பெருமக்களுடன் கலந்துரையாடும் பண்பு, குறை கூறுவோரை கருத்திற் கொள்ளாது அல்லாஹ்வுக்கு மட்டும் அஞ்சி செயற்படல் எனும் ஐந்து

பண்புகளை கொண்டிராதவர் காழி நீதிபதியாக இருக்க முடியாதென்று அலி (றழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

காழி நீதிபதி தனது துறையில் போதுமான அறிவுடையவராக இருப்பது அவசியம். குறிப்பாக குர்ஆன், சுன்னா முதலானவற்றை மூலதாரமாகக் கொண்ட ஷரீஆத் துறையை அறிந்திருப்பது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

மேற்குறித்த தகவல்கள் காழி நீதிபதி ஒருவர் தக்வாவும் அறிவும் புத்தி சாதுரியமும் உடையவராக இருக்க வேண்டும் என்று ஆரம்பகால முஸ்லிம் அறிஞர்கள் வலியுறுத்தியுள்ளனர் என்பதை காண்பிக்கின்றன.

### *4. காழி நீதிமன்ற பரிபாலன சீர்த்திருத்தங்கள் பற்றிய சில குறிப்புக்கள்*

குர்ஆன் சுன்னா என்பவற்றின் அடியாகப் பெறப்பட்ட ஷரீஆ சட்டங்கள் மாற்றப்பட முடியாதவை என்பது முஸ்லிம் சமூகத்தின் நம்பிக்கை. கால வளர்ச்சி, சமூக மாற்றங்கள் என்பன கூட அதனைப் புறந்தள்ள முடியாது. ஆயினும் மனிதன் தன் இஜ்திஹாத் மூலம் புதிய சூழல் அவாவி நிற்கும் புதிய சட்டங்களை ஏற்கனவே உள்ள ஷரீஆ நியதிகளுக்கும் அதன் இலட்சியங்களுக்கும் முரண்படாதவாறு வகுத்துக் கொள்ளலாம் என்பதை முஜ்தஹித்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். குர்ஆன், சுன்னா, இஜ்திஹாத் எனும் மூன்று மூலாதாரத்தினூடாக பெற்றுக் கொள்ளும் சட்டங்களை அமுல்படுத்துவதற்கான பரிபாலன முறை குலபாஉர் ராஷிதூன் காலத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளதை அவதானிக்க முடியும். இந்நடைமுறையைப் பின்பற்றியே முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் இலங்கைத் தீவில் 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் அங்கீகாரத்துடன் அரசால் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. முஸ்லிம்களின் விவாகம், விவாகரத்து என்பனவற்றுடன் தொடர்புபட்ட பல விடயங்களை பரிபாலிப்பதற்கான வழிமுறைகளையே இச்சட்டத் தொகுப்பு சுட்டிக் காட்டுகின்றது. அதன் நோக்கம் குறித்த விடயம் சம்பந்தமான ஷரீஆ விதிகள் உச்ச பயன் தரத்தக்கதாகவும், துஷ்பிரயோகம் செய்யப்படாது பிரயோகிப்பதற்கான வழிகாட்டுதலை வழங்குவதாகவும் உள்ளது. ஊம் ஓர் ஆணும் பெண்ணும் ஷரீஆ விதிகள் குறிப்பிடும் நியதிகளுக்கு ஏற்ப விவாகம் புரிந்து வாழ்வது இஸ்லாமிய வழிமுறை. அதனைப் பதிந்து வைக்க வேண்டும் என்ற தேவை ஷரீஆ விதிகளில் அடங்குவதில்லை. எனினும், முஸ்லிம் சமூகத்தில் ‘‘தக்வா’’ எனும் பண்பு தளர்ச்சி அடைந்த போது ஏற்பட்ட குளறுபடிகளை தவிர்க்க விவாகத்தைப் பதிவு செய்வதை முஸ்லிம் சமூகமும் அரசும் அங்கீகரித்தன. இந்நடைமுறை ஷரீஆ சட்டத்தில் தலையிடுவதாக அல்லாது, ஷரீஆ விதிகளின் வழிகாட்டலின் உச்ச பலனை அடைவதை நோக்கமாக கொண்டுள்ளது. இவ்வாறான நிலை தற்போதும் எழுந்துள்ளது (ஊம் குர்ஆன் குறிப்பிடும் மதாஉ எனும் நன்கொடை வழங்குவதற்கான நெறிமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டியுள்ளது). அத்தோடு 1951ஆம் ஆண்டின் விவாக, விவாகரத்துச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது எதிர்கொள்கின்ற சில குறைப்பாடுகளை நீக்கவும் அல்லது போதாமைகளை களையவும் சில திருத்தங்கள் வேண்டும் என்றும் படித்த முஸ்லிம்கள் குரல் கொடுத்து வருகின்றனர். அதனாலேயே தற்போது அரசு அதற்கான ஒரு குழுவை

நியமித்துள்ளது. முஸ்லிம் சமூகத்தின் பேச்சுப் பொருளாகவும் அது திகழ்கிறது. இவ்விடத்து பின்வரும் விடயங்களை சுட்டிக்காட்டுவது பயன் தரக்கூடும்.

I. காழி நீதிமன்ற நடைமுறை பற்றியது
இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் சிதறி வாழும் முஸ்லிம்களை கருத்திற் கொண்டு இலங்கையை காழிநீதிபதிகள் செயற்படக்கூடிய 65 மாவட்டங்களாக வகுத்து 65 காழிநீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தம் முன் கொண்டு வரப்படும் குறித்த துறை சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறார்கள். அதற்குத் தேவைப்படும் வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப்பட்டில்லை.
ஊம் வாதி பிரதிவாதிகளை அழைத்து விசாரிப்பதற்கான மண்டபமும் தஸ்தாவேஜுகளைப் பாதுகாப்பதற்கான காரியாலய வசதிகளும் வழங்கப்பட்டில்லை. அதனால் காழி நீதிபதிகள் தமது வீட்டில் அல்லது தனது பொருளாதார வசதிக்கு ஏற்ப பெற்றுக் கொண்ட வாடகை அறையில் காழி நீதிமன்றங்களை நடாத்தி வருகின்றனர். இதனால் குறித்த தினத்தில் விசாரனைக்காக அழைக்கப்பட்டவர்கள் தங்கியிருக்கத் தேவைப்படும் வசதி இல்லாது அல்லல்படுகின்றனர்.

II. காழி நீதிபதி தன் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு உதவக்கூடிய
பயிற்றப்பட்ட இலிகிதர் ஒருவரேனும் வழங்கப்பட்டில்லை. இது காழி நீதிபதியின் சுமையை மேலும் அதிகரிக்கின்றது. காழி நீதிமன்றங்களில் பதிவுகளை ஒழுங்காக பதிவதற்கும், பதிந்தவற்றை பாதுகாத்து ஓர் ஒழுங்கில் வைத்திருப்பதற்கும் இது இடைஞ்சலாகிறது.

III. காழி நியமனத்திற்கான சம்பளத்திட்டம் ஒன்று இல்லை. அதனால் தகுதியானவர்கள் விண்ணப்பிப்பதில்லை.

IV. காழி நீதிபதி நியமனம் மூன்று வருடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது. இது காழி ஒருவர் தன்னை வளர்த்துக் கொள்ளும் தேவையைக் குறைக்கின்றது.

V. ஜூரிமாரை நியமித்துக் கொள்ளும் சுதந்திரம் காழிக்கு வழங்கப்பட்டிருந்தாலும், ஜூரிமாரின் தகைமைகளோ, அல்லது ஜூரிமார்களாகத் தெரிவு செய்யப்படத்தக்கவர்களின் பெயர் அட்டவணையோ வழங்கப்படாதிருப்பதும் ஒரு குறைபாடாகும்.

VI. காழி நீதிபதிப்பதவி ஒரு பகுதிநேரப் பணியாகும். அதனால் முழுக்கவனம் செலுத்தும் வாய்ப்பு குறைகிறது.

VII. 1951 ஆம் ஆண்டின் இச் சட்டத்திற்கமைய காழி நீதிபதி சமூக அந்தஸ்து உடையவராக இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளதே அல்லாது, கல்வித் தகைமை பற்றிக் குறிப்பிடப்படவில்லை. இதனால் குறித்த துறை சார்ந்த அறிவு இல்லாதவர்கள் காழி நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுவதுண்டு. இது வாதி பிரதிவாதி எனும் இரு தரப்பனரிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அல்லது பகைமை உணர்வு அற்ற நிலையில் பிரிந்து செல்வதற்கான வாய்ப்பை உருவாக்க தடையாகக்கூடும்.

நீதியரசர் ஸலாம் அறிமுகப்படுத்திய கல்வித்தகைமைகள் கூட போதுமானதாக இல்லாத போதும் இதற்கு முன்பு இருந்த நிலையை விட பாராட்டத்தக்கதாகும்.

மௌலவி தராதரமோ பல்கலைக்கழக அறபு இஸ்லாமிய நாகரிக பாடமோ 1951 ஆம் ஆண்டின் விவாக விவாகரத்துச்சட்டத்தைப் படிப்பதற்கான வாய்ப்பையோ அல்லது காழி நீதிமன்ற நடைமுறை பற்றி அறிவதற்கான வாய்ப்பையோ வழங்குவதில்லை.

சட்டத்தரணிகள் உரோமன் டச்சச்சுச் சட்ட சம்பிரதாயங்களினடிப்படையில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள். அவர்கள் முஸ்லிம்களின் தனியார் சட்டங்களை சட்டக் கல்லூரியில் பயின்று இருப்பர். எனினும் அவர்கள் உரோமன் டச்சு சட்ட சம்பிரதாயங்களின் வழி நின்றே தமது சட்டத்தரணி தொழிலில் ஈடுபடுகின்றனர். ‘தக்வாவை’ மையமாகக் கொண்ட ஷரீஆ நியதிகளுடனான வழிமுறையில் இவர்களின் தொடர்பு எத்தகையது என்பது நோக்கப்பட வேண்டிய தொன்றாகும். உரோமன் டச்சு நீதிமன்றம் ஊழரசவ ழக டியற என்றே அழைக்கப்படுகின்றது. அது ஊழரசவ ழக துரளவஉைந என்ற நிலையில் செயற்படுவதில்லை. சட்டத்தின் ஆட்சி நிலவும் தொழிலில் ஈடுபட்டவர்கள் தக்வாவின் வழியமைந்த காழி நீதிமன்றங்களை வழிநடாத்துவதில் வெற்றியடைய சிரமம் அடையக் கூடும். காழி நீதிமன்றத்தில் வாதி பிரதிவாதிகளுக்காக வாதி ஆஜராக அனுமதிக்கப்படாத நிலையில், காழி நீதிபதியாக நியமிக்கப்படுவது தகுமா என்றும் சிந்திப்பது அவசியமாகும்.

விவாகரத்துப் பதிவுச் சான்றிதழின் நிரல்-8ல் விவாகரத்தின் தன்மை எனும் தலைப்பில் (கணவனால் அல்லது மனைவியால் முன்னெடுக்கப்பட்டதா என்பது பற்றிப்பதியுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் கணவனால் (தலாக்) மனைவியினால் (பஸ்கு) என்றொரு பதிவையே இடமுடியும். கணவனால் கூறப்படும் தலாக் ‘தலாக் அஹ்ஸன்’, ‘தலாக் ஹஸன்’ என்ற பதப்பிரயோகத்தைப் பயன்படுத்தி பதிவதே நல்லது. தலாக் அஹ்ஸன் என்பது மனைவி மாதவிடாயிலிருந்து சுத்தமான காலத்தில் உடல் உறவு கொள்ளாத நிலையில் ஒரு முறை தலாக் கூறுவதைக் குறிக்கும். குறித்த இத்தாக் காலம் முடிந்ததும் கணவன் தலாக்கை வாபஸ் பெறாவிட்டால் இத்தாக் காலம் முடிந்ததும் விவாகம் ரத்தாகிவிடும். இவ்விருவரும் மீண்டும் விவாகம் புரிய விரும்பினால் ‘தஹ்லீல்’ வழிமுறையைக் கையாளாது உரிய முறையில் மீண்டும் விவாகம் செய்து கொள்ளும் வாய்ப்புண்டு.

தலாக் ஹஸன் என்பது மனைவி மாதவிடாயில் இருந்து சுத்தமாக இருக்கின்ற காலப்பகுதியில் உடல் உறவு கொள்ளாத நிலையில் முதலாம் முறை தலாக் கூறுவார். அடுத்து வருகின்ற சுத்த காலத்தில் இரண்டாம் முறையும் தலாக் கூறுவார். இவ்வாறு மூன்றாம் முறையும் தலாக் கூறியதும் தலாக் செல்லுபடியாகும். அதன் பின் அவ்விருவரும் மீண்டும் விவாகம் புரிய விரும்பினால் ‘தஹ்லீல்’ முறையைக் கையாண்டே விவாகம் செய்யமுடியும். தலாக் அஹ்ஸன், தலாக் ஹஸன் என்ற பதப்பிரயோகத்தைக் கையாண்டு

தலாக்கின் தன்மையைக் குறிப்பது அவ்விருவரும் மீண்டும் விவாகம் புரியும் உரிமையைப் பெறுவதற்கான வழிமுறையை இலகுவாகச் சுட்டிக்காட்டும்.

1951 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையினர் ஷாபி மத்ஹபை பின்பற்றுபவர்கள் என்பதால் ஒருவனிடம் தன் மத்ஹபை உறுதிப்படுத்துமாறு கோராது ஷாபி மத்ஹப் படி தீர்ப்பு வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. எனினும், வாதியோ பிரதிவாதியோ தான் வேறு ஒரு மத்ஹபைச் சேர்ந்தவன் என்று நிறுவி தனது பிரச்சினையில் தனது மத்ஹப் வழிமுறையில் தீர்ப்பளிக்குமாறு கோரினால் ஒரு காழி நீதிபதி எவ்வாறு நடந்து கொள்ளுதல் வேண்டும் என்று வழிகாட்டப்பட்டு இல்லை. ஊம் வலிகாரர் அனுமதியின்றி மேற்கொள்ளும் விவாகம் செல்லுபடியாகாது என்பது ஷாபி மத்ஹபின் கருத்தாகும். அவ்வாறான விவாகம் செல்லுபடியாகும் என்பது ஹனபி மத்ஹபினரின் கருத்தாகும். வலிகாரரின் விருப்பம் கிடைக்காத நிலையில் தான் விரும்பும் ஆடவனை விவாகம் புரிய ஒரு குறித்த பெண் விரும்பக்கூடும். இந்நிலையை காழிநீதிபதி எவ்வாறு எதிர் கொள்வார் என்பதற்கான வழிகாட்டுதல் தரப்பட்டில்லை. 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் மத்ஹபை குறிக்க 'ளுநஉவ' (உட்பிரிவு) என்ற ஆங்கில பதத்தைக் குறித்துள்ளது. இப்பதப் பிரயோகம் பொருத்தமற்றது. இஸ்லாமிய சட்டவிதிகள் தொகுப்படாதிருந்த ஆரம்ப காலத்தில் பொதுமக்களின் நலன் கருதி முஜ்தஹித்கள் குர்ஆன், சுன்னா, இஜ்திஹாது எனும் மூலாதாரங்களைத் தாம் புரிந்து கொண்ட பான்மையில் சட்டங்களைத் தொகுத்து தந்துள்ளனர். அவற்றைக் குறிக்கவே அவற்றைத் தொகுத்த ஆசிரியர்களின் பெயரால் அவ்வழிமுறை வழங்கப்படுகிறது (ஊம் ஷாபி மத்ஹப், மாலிக் மத்ஹப்) என்பது நோக்கத்தக்கது.

1951 ஆம் ஆண்டின் இச்சட்டத்தின் 47ஆம் பிரிவில் காழி ஒருவரின் அதிகார வரம்பு எல்லை கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒருவன் அவனது பிள்ளைக்கான தாபரிப்பு பணமாக எவ்வளவு வழங்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கும் அதிகாரம் காழி நீதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. அவரது இவ்வுரிமையில் மஜிஸ்டிரேட் நீதிமன்றமோ அல்லது வேறு ஒரு நீதிமன்றமோ தலையிட முடியாது. எனினும் குறித்த ஒரு ஜோடியின் விவாகரத்தின் பின் அவர்களது குழந்தை யாரிடத்தில் வாழ வேண்டும் என்று தீர்ப்பு வழங்கும் அதிகாரம் காழி நீதிபதியிடம் இல்லை. இவ்விடயத்தில் அக்குழந்தையின் பெற்றோர் கருத்து முரண்பட்டால் தத்தம் உரிமையைப் பெற அவர்கள் மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தை நாடவேண்டிய நிலை உள்ளது.

1951ஆம் ஆண்டின் சட்டத்தின் வழி புதிய காழி நீதிபதிகள் நியமிக்கப்படுவார்கள். இப் புதியவர்கள் நீதித்துறை நடைமுறைகள், நீதி விசாரணை என்பவற்றில் முன் அனுபவமற்றவர்கள், அதனால் குறித்த ஒரு விடயத்தை அவர்கள் விசாரிக்கும் வழிமுறையிலும், வழங்கும் தீர்ப்பிலும் கூட காழி நீதிபதிகள் இடையே வேறுபாடு தோன்றலாம். இதனைத் தவிர்ப்பதற்கான பயிற்சிப் பட்டறைகளை நடாத்துவதற்கான வழிகாட்டல் வழங்கப்பட்டில்லை.

காழி நீதிபதிகள் சமூக அந்தஸ்து உடையவர்களாக, சமூகம் கண்ணியப்படுத்தும் ஒருவராக இருக்க வேண்டும் என்ற தகைமையை *1951* ஆம் ஆண்டின் இச்சட்டம் குறித்து காட்டுகிறது. எனினும் அவர்கள் தமது ஆளுமையை (ீநசளழயெடவைல) மேம்படுத்திக் கொள்வதற்கு அவர்கள் தம் வாழ்விலும் காழி நீதிமன்றத்திலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தலேனும் வழங்கப்பட்டு இல்லை.

'வஹி'யின் அடிப்படையில் தக்வாவுக்கு (இறையச்சத்திற்கு) முதன்மை கொடுத்து வாழ்ந்த ஒரு சமூகத்திற்கு அல்லாஹ்வும் அவனது தூதரும் வழங்கிய விவாக விவாகரத்து சார்ந்த போதனைகள், பகுத்தறிவு, செல்வாக்கு மிஞ்சிய இக்காலப்பகுதி மக்களிடையே அமுல் நடாத்தப்பட வேண்டிய சூழல் உள்ளது. இவ்வாறான ஒரு சூழலில் காழி நீதிபதிகள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நியதிகளை அறிமுகப்படுத்துவது அவசியமாகும்.

ஊம் காழி நீதிபதிகள் வாதியையும் பிரதிவாதியையும் சம அந்தஸ்தில் வைத்து நோக்குதல், செயல்படுதல். ஒரு தரப்பினருக்கு முன்னுரிமை கொடுக்காதிருப்பது, இரு தரப்பினரதும் பேச்சுக்களுக்கு செவிமடுப்பது,

வாதியிடம் இருந்தோ பிரதிவாதியிடமிருந்தோ நன்கொடைகளை பெறுவதைத் தவிர்ப்பது.

கோபாவேசம், களைப்பு, சோகம், அதிக மகிழ்ச்சி, பசி, தாகம் முதலான உணர்வுகளுக்கு ஆளாகியுள்ள நிலையில் தீர்ப்பு வழங்காதிருத்தல், கண்ணியமான ஆடைகளை உடுத்து வருதல்.

*1951* ஆம் ஆண்டின் இச்சட்டத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் காழி நீதிபதிகளால் வாதி பிரதிவாதி எனும் இரு தரப்பாரில் ஒரு தரப்பார் பாதிக்கப்படுகின்றனர் என்ற ஒரு குற்றச்சாட்டு சில சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்படுவதுண்டு. தமது எண்ணப்படி தீர்ப்புகளை பெறாதவர்கள் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர். குறிப்பாக ஆண் காழி நீதிபதிகளால் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகவும், அதனால் பெண்களை காழியாக நியமிக்குமாறு வலுவான கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்விரு தரப்பாரில் ஒரு தரப்பினர் பாதிக்கப்படாதிருப்பதற்காக பெண்களை காதி நீதிபதியாக நியமிப்பதாலோ அல்லது துறை சார்ந்த ஆழமான அறிவும் பகுத்தறிவு ஆற்றலும் உடையவர்களை நியமிப்பதாலோ எதிர்பார்க்கும் பலனை அடைய முடியாது. ஏதிர்ப்பார்க்கும் ஏனைய தகைமைகளுடன் 'தக்வா' உடையவர்களை இனங்கண்டு இப்பதவிக்கு நியமிப்பது ஒன்றே இதற்கான மாற்று வழி எனலாம்.

நீதி வழங்குதல் ஓர் இபாதத். அது குர்ஆனின் கட்டளை. நபிகளார் (ஸல்) அவர்களின் வழிமுறை. உண்மையை அறிந்த நிலையில் ஆசா பாசங்களால் தூண்டப்பட்டு தவறான தீர்வை வழங்குவோரும், அறியாமை காரணமாக தவறான தீர்ப்பை வழங்குவோரும் நரகம் செல்வர். உண்மை வழி நின்று தீர்ப்பு வழங்கினால் சுவர்க்கம் பரிசாக கிடைக்கும் என்பன போன்ற விடயங்களையும் உள்ளடக்கி நீதி வழங்கல் பற்றிய இஸ்லாமிய கோட்பாட்டைக்

காழி நீதிபதிகளுக்கு அறிவுறுத்துதல், காழி நீதிபதிகள் தம் பொறுப்பை சரியாக நிறைவேற்றத் தூண்டக்கூடும்.

**உசாத்துணைகள்**

All Ceylon Jamiyyathul Ulama, (2022). *Proposal for the Muslim Marriage Divorce Act Sri Lanka*.

Anwar, A.Q. (1997). *A Sunni Shafi Law Code Islamic Book Service*. New Delhi.

Government of Ceylon. (2006). *Muslim Marriage and Divorce Act Government Publication Burau*. Department of Government Printing: Colombo.

Imam Khassaf. (D. 261 AH). *Adab A Qadi*. Translate, Dr. Muir Ahmad Mughal Adam Publishers: New Delhi.

Jalaldeen M.S. (1990). *The Muslim Law of Marriage Divorce and Maintenance in Sri Lanka*

*Federation of Assemblies of Muslim Youth in Sri Lanka*. Colombo: A Famys Publication Sri Lanka.

Muslehuddin. M. (1991). *Judicial System of Islam Its Origin & Development*. Islamic Publication (Pvt) Ltd: Lahore.

Maudoodi. S.A. (1993). *The Law of Marriage and Divorce in Islam*. Delhi

Qureishi. M.A. (2020). 6th Edition. *Textbook on Muslim Law*. Central Law Publications: Allahabad.

Saleem. M. (2001). *The Quazi court system in Sri Lanka and its Impact on Muslim Women*.

*Muslim women*. Research and Action Forum Sri Lanka: Colombo.

Yusuf, A. (2000). *Islamic Law in the modern world*. Trs. Al-Hadi A Khalifa: Riyad.

அமீன். எம்.ஐ.எம். (2008). *இஸ்லாமியக் குடும்ப வாழ்வு.* அல்ஹஸனாத் பதிப்பகம்: ஹெம்மாதகம.

அமீன். எம்.ஐ.எம். (2000). *இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் (1870-1915).* அல்ஹஸனாத் பதிப்பகம்:ஹெம்மாதகம.

பத்மநாதன். சி. (2001). *இலங்கைத் தமிழரின் தேச வழமைகளும் சமூக வழமைகளும்.* குமரன் புத்தக இல்லம்: கொழும்பு.

மன்சூர். எம்.ஏ.எம். (2017). *முஸ்லிம் தனியார் சட்டம் சில அவதானங்கள்.* அல்குர்ஆன் திறந்த கல்லூரி, கண்டி.